**சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்.**

**முன்னிலை : திரு.K.பழனிவேல், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 60/2021**

***TNCB 19000-273-2021***

1). திருமதி. ராஜேஸ்வரி,

2). திரு. திருமலைசெல்வம் **....வாதிகள்**

**//எதிர்//**

திருமதி. பரிமளம் **.... பிரதிவாதி**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.12.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சதிஷ், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.T. சிவப்புகழ், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

01). அசல் வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 ன் கீழ் தாவா சொத்தை 3 சமபாகங்களாக பிரித்து அதில் 2 பாகத்தினை வாதிகளுக்கு ஒதுக்க கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**:-

தாவா சொத்தான "B" ஷெட்யூல் சொத்து கடந்த 05.09.1966 தேதியிட்ட

பாகப்பத்திரத்தின் படி சுப்பைய கவுடர் என்பவருக்கு பாத்தியப்பட்டது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சுப்பையகவுடரின் மகள் மற்றும் மகன்கள் ஆவார்கள். மேற்கண்ட சுப்பையகவுடர் தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் கடந்த 16.08.1992 அன்று இறந்துவிட்டார். மேலும், 2ம் வாதிக்கு திருமணம் நடைபெறவில்லை. 2ம் வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1ம் வாதியின் பெயருக்கு கடந்த 06.11.2019 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்.

இந்நிலையில், தாவா சொத்தினை பாகம் பிரித்து தர பிரதிவாதியை கேட்டு அவர் தரவில்லை. மேலும், கடந்த 28.04.2021 அன்று பிரதிவாதியும், அவரைச் சார்ந்த நபர்களும் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார்கள். ஆகையால் வாதிகள் பிரதிவாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்கள். எனவே, தாவா சொத்தை 3 சம பாகங்களாக பிரித்து அதில் 2 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கி உத்தரவிட வேண்டும்.

03). **பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்**:-

வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. 2ம் வாதி ஒரு மனவளர்ச்சி குன்றிய நபர். அவர் பிரதிவாதியின் பாதுகாப்பில் தான் உள்ளார். மேலும், ஏற்கனவே வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பாகப்பிரிவினை செய்வதற்காகவும், 2ம் வாதியால் 1ம் வாதியின் பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்ட 06.11.2019ம் தேதியிட்ட விலை ஆவண எண்.9763/2019 செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக் கோரி அசல் வழக்கு 43/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1ம் வாதி அசல் வழக்கு எண். 51 /2021 என்ற வழக்கை மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு 1/3 பாகம்

உரிமையுள்ளது. ஆனால், 1ம் வாதி 2/3 பாகம் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாலும், மேலும், 2ம் வாதி மன வளர்ச்சி குன்றியவர் என்பதால் உரிய பாதுகாவலர் மூலம் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதாலும், ஆகவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. **<u>இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு</u>**

| | |
|---|---|
| *1)* | *Whether the Suit is not maintainable for want of appointment of guardian to 2nd Plaintiff?* |
| *2)* | *Whether the Plaintiffs are entitled to partition in the suit properties if so, to what extent?* |
| *3)* | *To what other reliefs the Plaintiff is entitled to?* |

05. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு உள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

***<u>06). எழுவினா 1 மற்றும் 2 ற்கான விவாதமும் தீர்வும்</u>***

***<u>Whether the Suit is not maintainable for want of appointment of guardian to 2nd Plaintiff?</u>***

***<u>Whether the Plaintiffs are entitled to partition in the suit properties if so, to what extent?</u>***

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், தாவா சொத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சுப்பைய கவுடர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/3 பாகம் உரிமையுள்ளது எனவும், ஆகவே, தாவா சொத்தை 3 சமபாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்குரிய 2/3 பாகத்தை வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது.

07). பிரதிவாதி தரப்பில், 2ம் வாதி ஒரு மனவளர்ச்சி குன்றிய நபர். அவர் பிரதிவாதியின் பாதுகாப்பில் தான் உள்ளார் என்றும் இந்த வழக்கை அனுமதிக்கும் பட்சத்தில் 2ம் வாதிக்குண்டான பாகத்தையும், தவறாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

08). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தகப்பனாரான சுப்பைய கவுடருக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்கண்ட சுப்பைய கவுடர் தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்பதும், மேலும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தான் தாவா சொத்திற்கு வாரிசுதாரர்கள் என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

09). இந்நிலையில், தாவா சொத்தை பாகம்பிரித்து தர பிரதிவாதி முன் வராததால் பாகம் பிரித்து தரக் கோரி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட வாதிகள் தங்களது தரப்பு வழக்கினை ***இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 101 (பாரதிய சாக்ஷ்ய அதிநியம் சட்டம் பிரிவு 104 ) ன் படி*** நிரூபணம் செய்ய வேண்டியது வாதிகளின் கடமையாகும். மேற்கண்ட வாதிகள் தரப்பு வழக்கானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்து ஆராய்ந்து பரிசீலனை செய்து பார்கையில் வாதிகள் தங்கள் வழக்கினை நிரூபணம் செய்ய 1ம்வாதி வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட வா.சா.1 ன் சாட்சிய சங்கதி என்பது தாவா சொத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தந்தையான சுப்பையகவுடருக்கு வாரிசுரிமையின் அடிப்படையில் பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கப்பெற்றது என்று தெரிவித்து அந்த சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில் வா.சா.ஆ. 1 பாகசாசனப்

பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். அந்த பாக சாசனப் பத்திரத்தில் B ஷெட்யூல் சொத்து சுப்பையகவுடருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விபரம் புலனாகிறது. மேலும், வா.சா.1 தனது சாட்சியத்தில் தாவா சொத்தினை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் தங்களது தந்தையான சுப்பைய கவுடர் இறந்துவிட்டார் என தெரிவித்து வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளார். மேலும், சுப்பையகவுடருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர்கள் தான் வாரிசுதாரர்கள் என்பதற்காக வா.சா.ஆ. 5 வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளார். அந்த வா.சா.ஆ. 5 வாரிசு சான்றிதழில் வாதிகள் மற்றும் பிரதிவாதி தான் சுப்பையகவுடருக்கு வாரிசுதாரர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர் தான் சுப்பைய கவுடருக்கு வாரிசுதாரர் என்பதை பொறுத்து இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

10). மேற்கண்ட வாதிகள் தரப்பு வழக்கின் படி, வாதிகளுக்கு 2/3 பாகம் கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து ஆராய்ந்து பரிசீலனை செய்கையில், ***இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8*** ஆனது ஆண்களின் வாரிசுகள் பற்றிய பொது விதிகளை பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறது,

*" உயில் மூலம் தமது சொத்துக்களுக்கு ஒரு ஏற்பாடு செய்து வைக்காமல் ஆண் இந்து ஒருவர் இறந்துபோனால், அவருடைய சொத்துக்களை இந்த இயலின் வகையங்களின்படி அடியிற்கண்ட வாரிசுகள் அடைவார்கள். அதாவது,*

*(அ) முதலில் இச்சட்டத்தின் அட்டவணையில் முதல் வகுப்பு வாரிசுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அடைவார்கள்.*

*(ஆ) இரண்டாவதாக, முதல் வகுப்பு வாரிசுகளில் யாருமில்லாவிட்டால் இந்தச் சட்டத்தின் அட்டவணையில் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாகக் குறிப்பிட்டுள்ளவர்கள் அடைவார்கள்.*

(இ) மூன்றாவதாக, இரண்டு வகுப்புகளிலும் வாரிசுதாரர்கள் யாருமில்லாவிட்டால், இறந்தவரின் பங்காளிகள் சொத்துக்களை அடைவார்கள்.

(ஈ) கடைசியாக, பங்காளிகள் இல்லாவிட்டால் இறந்தவருடைய சொத்துக்களை அவரது பந்துக்கள் அடைவார்கள்.

11). மேலும்,

**இந்து வாரிசுரிமைச் சட்டம்1956 பிரிவு 10 ஆனது**

**முதல் வகுப்பு வாரிசுகளுக்கிடையில் சொத்தை பகிர்ந்தளிப்பது எவ்வாறு என்பது பற்றி கூறுகிறது :-**

உயில் எழுதி வைக்காமல் இறந்து போகும் ஆண் இந்துவின் சொத்துக்களை அட்டவணையின் முதல் வகுப்பு வாரிசுகள் பின்வரும் விதிகளின் படி அடைவார்கள்.

விதி 1- இறந்தவரின் மனைவி ஒரு பாகம் அடைவார். இறந்தவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால் அனைவரும் சேர்ந்து ஒரு பாகத்தைப் பெறுவார்கள்.

விதி 2- இறந்தவருடைய மகன்கள், மகள்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தை பெறுவார்கள்.

விதி 3 – இறந்தவருடைய மகனோ, மகளோ முன்னதாக இறந்திருந்தால் இறந்துபோன ஒவ்வொரு மகன் அல்லது மகளுடைய கிளையில் கண்ட வாரிசுகள் அனவைரும் சேர்ந்து ஒரு பாகத்தைப் பெறுவார்கள்

விதி 4 - விதி 3 -இல் குறிப்பிடப்பட்ட பாகத்தைப் பகிர்ந்தளித்தலாவது.

(i) முன்னதாக இறந்த மகனுடைய கிளையிலுள்ள வாரிசுகளில் அவருடைய (மனைவி அல்லது மனைவிகள்) மற்றும் அவருடைய மகன்கள், மகள்கள் சமபாகம் பெறுவார்கள், முன்னதாக இறந்த அவருடைய மகன்களின்

*கிளையில் உள்ளவர்கள் அதே பாகத்தைப் பெறுவார்கள்.*

*(ii) முன்னதாக இறந்த மகளின் கிளையிலுள்ள வாரிசுகளின் மகன்களும், மகள்களும் சமமான பாகத்தைப் பெறுவார்கள்.*

12). மேற்கண்ட சட்ட விதிகளானது ஒரு இந்து ஆண் தம்முடைய சொத்துக்களை எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்து போனால் அவருடைய முதல் வகுப்பு வாரிசுகளுக்கு வந்தடையும் பாகங்களை பற்றி தெளிவாக விளக்குகிறது. இந்த வழக்கில் இறந்து போன சுப்பையகவுடருக்கு வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்கள் முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் என்பதை வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

13). மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் ***2008(2) LW424 (SC) Bhanwar singh -vs- Puran and others*** என்ற வழக்கில் பிரிவு 8 ன் படி இந்து ஆண் இறந்த பிறகு அவரது சொத்துக்கள் இந்து சட்ட அட்டவணை முதல் வகுப்பு வாரிசில் உள்ள மகன்கள் மற்றும் மகள்களை சென்றடையும் என்று தெளிவுப்படுத்தியுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***2009(1) TNCJ 687(Mad) Pothilingam -vs- M. Sankarapandiyan*** என்ற வழக்கில் இந்து ஒருவர் உயில் எழுதி வைக்காமல் இறந்திருக்கும் போது அவரது சொத்தில் ஆண் வழி வாரிசுகளும் பெண் வழி வாரிசுகளும் சரிசமமான பங்கை பெறுவார்கள் என்று தெளிவுப்படுத்தியுள்ளது.

14). இந்நிலையில், பிரதிவாதி தரப்பில் 2ம் பிரதிவாதி மனநலம் குன்றியவர் என்பதால் உரிய சட்ட விதிகளை பின்பற்றி உரிய பாதுகாவலர் மூலமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் வாதியின் வழக்கை அனுமதிக்கும் பட்சத்தில் 2ம் வாதிக்குண்டான பாகத்தையும், தவறாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு, அவரது வழக்கினை சாட்சி மற்றும் சான்றாவணத்தின் மூலம்

இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி நிரூபணம் செய்ய எவ்வித முயற்சியும் செய்யவில்லை. மேலும், 2ம் வாதி மனநலம் குன்றியவர் என தெரிவித்த நிலையில், அதனையும் உரிய சான்றாவணத்தின் மூலம் நிரூபணம் செய்ய பிரதிவாதி தவறிவிட்டார்.

15). மேலும், வா.சா.1 னை குறுக்கு விசாரணை செய்ய பலமுறை வாய்ப்பு கொடுத்தும் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இந்நிலையில், பிரதிவாதியின் வழக்கறிஞர் பிரதிவாதியிடமிருந்து எவ்வித தகவலும் பெறபடவில்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டு வழக்கில் இருந்து விலகியுள்ளார். இந்நிலையில், இந்நீதிமன்றத்தில் இருந்து பிரதிவாதிக்கு மேற்கொண்டு இவ்வழக்கினை தொடர்ந்திட ***ந.க. எண். 568/2024 நாள் 08.10.2024*** அன்று அறிவிப்பு அனுப்பியும் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் தனது வழக்கினை தொடர்ந்து நடத்திட முன்னிலையாகி தனது வழக்கினை நிரூபிக்கவில்லை. மேற்கண்ட பிரதிவாதியின் செயலானது வாதியின் வழக்கினை உட்கிடையாக ஒப்புக் கொண்டுள்ளது புலனாகிறது.

16). எனவே, இந்த வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதி ***இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8 ன்*** படி இந்த சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிட்ட முதல் வகுப்பு வாரிசுதாரர்கள் என்பது தெளிவாகிறது. எனவே, மேற்கண்ட தீர்வுகளின் அடிப்படையில் வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகியோர்கள் தாவா சொத்தில் சரிசமமான பாகம் பெற உரிமையுடையவர்கள் என்று கருதுவது தான் நீதியின் பால் சிறந்ததாக இருக்குமென இந்நீதிமன்றம் எழுவினா 1 மற்றும் 2 ற்கு தீர்வு காண்கிறது.

***17). எழுவினா (3) ற்கான விவாதமும், தீர்வும்***

***To what other reliefs the Plaintiff is entitled to?***

வழக்கின் தரப்பினருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் குறித்து தெளிவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரங்களும் வழக்கின் தரப்பினருக்கு

கிடைக்கத்தக்கதல்லவென்றும், வழக்கின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகிறது.

**18). இறுதியாக,**

***1). வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தை 3 சம பாகங்களாக பிரித்து அதில் 2/3 பாகம் 1 மற்றும் 2 வாதிகளுக்கு கூட்டாகவும், 1/3 பாகம் பிரதிவாதிக்கும் கிடைக்கத்தக்கது என தீர்ப்பளிக்கப்படுகிறது.***

***2). மேலும், இதன் தொடர்ச்சியாக உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 20 விதி 18 ன் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வாதிகளுக்கு உத்தரவிடப்படுகிறது.***

***3). வழக்கின் தன்மை கருதி அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.***

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதனை, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 04ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம் /-K. பழனிவேல்,**

**சார்பு நீதிபதி,**

**மேட்டுப்பாளையம்.**

**1). வாதிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1). | திருமதி. ராஜேஸ்வரி | வா.சா.1 |

**2). வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | 05.09.1966 | பாகசாசன பத்திரம் | வா.சா.ஆ.1 | நகல் |
| 2 | --- | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | வா.சா.ஆ.2 | நகல் |
| 3 | --- | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | வா.சா.ஆ.3 | நகல் |
| 4 | --- | சுப்பைய கவுடரின் இறப்பு சான்றிதழ் | வா.சா.ஆ 4 | நகல் |
| 5 | --- | சுப்பைய கவுடரின் வாரிசு சான்றிதழ் | வா.சா.ஆ 5 | நகல் |
| 6 | --- | கணிணி பட்டா | வா.சா.ஆ 6 | நகல் |

**3). பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| | --- இல்லை --- | |

**4). பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | | --- இல்லை --- | | |

**ஒப்பம் /-K. பழனிவேல்,**
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்.

*அ.வ.எண். 60/2021*
*04.12.2024*
*சீரான தீர்ப்புரை*